## DEPOSITIION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )

## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 128/2023**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-6/Lw-9 |
| Name | : | Mr. Sakthivel |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.09.2025.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் பிச்சம்பாளையத்தில் வசித்து வந்து வியாபாரம் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன் 2022 ஆம் வருடம் மாதம் நாள் ஞாபகமில்லை. சாந்தி தியேட்டர் அருகே உள்ள கார் ஸ்டாண்டில் இருந்தபோது காவல் அதிகாரிகள் வந்தார்கள். அவர்களுடைய விவரம் தெரியாது என்னிடம் கையொப்பம் செய்யும்படி சொன்னார்கள் கையொப்பம் செய்தேன். அந்த ஆவணத்தில் என்னுடன் கார் ஸ்டாண்டில் இருந்து இன்னொரு நபர் கையொப்பம் செய்தார். அவருடைய விவரம் தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதல் கையொப்பம்

என்னுடையது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். நான் கையொப்பம் செய்த ஆவணங்களில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளது என்று தெரியாது கையொப்பம் செய்ய சொன்னதால் கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ–3.

2. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ–4. அந்த சமயத்தில் காவல் அதிகாரிகள் கார் ஸ்டாண்டில் பிரச்சனை நடந்ததாகவும் அதைப்பற்றி விசாரணை செய்தார்கள். ஆனால் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியவில்லை. நான் கையொப்பம் செய்த நாளுக்கு முன்பு இரவு அடிதடி நடந்ததாக போலீசார் அப்போது என்னிடம் சொன்னார் சாந்தி தியேட்டர் கார் ஸ்டாண்டில் நான் 20 வருடங்களாக வாகனத்தை ஓட்டி வருகிறேன். அதனால் அந்த ஸ்டாண்டில் வரும் வாகனங்களையும் உன்னை பற்றி எனக்குத் தெரியும் ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். அன்றைய தினத்திற்கு முன் இரவு அங்கு சண்டை நடந்ததா என்று போலீசார் கேட்டார்கள் எனக்கு தெரியாது என்று நான் சொன்னேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வேன் எங்களுடைய ஸ்டாண்டில் இருந்து வந்ததா என்றால் நான் பார்த்ததில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> இல்லை

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.09.11 18:45:28 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.